Regd. No. M. 2811.

காலணா

சுதந்திரச்சங்கு


“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 4-3-33

“இந்தியா காந்தி மயம், இங்கிலாந்து சர்ச்சில் மயம்”



“சர்ச்சில் சொல்வதை நீங்கள் நம்புவீர்களானால் இந்தியா முழுவதும் கறுப்பான நாடென்றும், இந்தியாவில் காந்தி யென்ற ஒரே ஒருவர் தான் வசிக்கிறானென்றும் நீங்கள் நம்ப வேண்டும். இங்கிலாந்தில் சர்ச்சில் என்ற ஒரே ஆள்தான் இருக்கின்றானென்று நீங்கள் நம்புகின்றீர்களா?” என்று ஸாமுயேல் ஹோர் ஓர் கூட்டத்தில் பேசி யிருக்கின்றார். ஸாமுயேல் ஹோருக்கு ஒரு வார்த்தை. இந்திய மக்கள் மனத்தில் வேரூன்றி விட்ட சாந்த மகா முனியின் திருவுருவம் இந்தியாவையே கவர்ந்து விட்டது என்றே நாம் கருதுகின்றோம். ஆகவே இந்தியா தான் காந்தி! ‘அடக்கு முறையினால் இந்தியாவை ஆள வேண்டும்’ என்று நினைக்கின்ற ஆங்கில சர்க்காரின் நடத்தையினின்று இங்கிலாந்தை சர்ச்சில் கவர்ந்திருக்கின்றான் என்று சொல்வதும் மிகை யன்று.

ஷூஸ்டர் திட்டம்

செலவுக் கதிகமாக வரவு மதிப்பிடுவது ஒரு சாமர்த்தியம் தான். சென்னை மாகாண வரவு செலவு திட்டத்தில் செலவுக்கு மேல் வரவு காட்டி யிருக்கிறார்கள். மத்திய மாகாண வரவு செலவு திட்டத்திலும் 'மிச்சம்' காட்டி யிருக்கின்றனர். இந்தியா சட்ட சபையில் ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர் ஸமர்ப்பித்த வரவு செலவு திட்டத்திலும் செலவுக்கு அதிகமாக வரவைக் காட்டி யிருக்கின்றார். மிச்சம் ஏற்படும்படியான வரவு செலவு திட்டங்களை சமர்ப்பிப்பது இந்த வருடத்தில் ஒருவித தொத்து நோய் போலிருக்கிறது. ஆனால், ஒரு தேசத்தின் வருங்கால வரவு செலவுகளை நிர்ணயிக்குங்கால் 'செலவுக்கு மேல் வரவு காட்டலாகாது' என்பது பல அறிஞர்களின் அபிப்பிராயம். அந்த மாதிரி லாபம் வருமென்று ஜோஸ்யம் கூறி விட்டால் ஒவ்வொரு இலாகாவும் "எனக்குக் கொடு அதிகமிருக்கும் பணத்தை!" என்று கூச்சலிட்டுக் கொண்டே யிருக்குமென்பது நிச்சயம். ஆனால் இதையெல்லாம் சென்னை நிதி மந்திரியான ஸ்டோக்ஸூம், இந்தியா நிதி மந்திரியான ஷூஸ்டரும் கவனிப்பார்களா? "அம்மா, அம்மா மாடு வந்தது" என்பது போல ஏதாவது ஒரு வரவு செலவுக் கணக்கைக் காட்டுவது தானே அவர்கள் வேலை. நிற்க.

அடுத்த 1933-34க்கு மதிப்பிடப்பட்டுள்ள இந்திய வரவு செலவு திட்டம் பின்வருமாறு.

எதிர்பார்க்கும் வருமானம்	124½ கோடி ரூ.
ஏற்படக்கூடிய செலவு	124 கோடி ரூ,

ஆகவே 42 லக்ஷ ரூபாய் லாப மேற்படலாமாம். இந்தியாவில் எல்லாவிதத் தொழிலிலும், நஷ்டமேற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் 'ராஜாங்கம்' என்ற தொழிலில் மட்டும் லாபம் ஏற்படுவது ஓர் அதிசயமாகும்.

ஷூஸ்டர் சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்தில் நாம் கவனிக்கவேண்டிய அம்சங்கள் பல உண்டு.

இந்திய ராணுவச் செலவில் 54 லக்ஷம் ரூபாய் குறைக்கப்பட்டு விட்டதாகவும், கடைசியில் இந்த இனத்தின் மொத்தச் செலவு 46 கோடியே 20 லட்சமாக இருக்குமென்றும் ஷூஸ்டர் கூறினர். ஏழை இந்தியனின் தலை மீது இவ்வளவு அதிகமான ராணுவச் செலவை சுமத்துவது அநீதியல்லவா என்று கேட்கின்றோம். இதர நாடுகளிலில்லாத அவ்வளவு உயர்வான ராணுவச் செலவு இந்தியாவில் மட்டும் ஏன் இருக்க வேண்டும்?

இந்தியாவில் விளை பொருள்களின் விலை மிகவும் குறைந்து விட்டதென்பதை ஷூஸ்டரே ஒப்புக் கொண்டிருக்கிறார். இம்மாதிரி விலைவாசி குறைந்து விடுவது ஒரு நாட்டின் செல்வநிலை சீரழிந்து கிடப்பதையே குறிக்கும் எனப் பொருளாதார சாஸ்திரம் கூறுகின்றது. ஆனால் ஏழை இந்தியனிட மிருந்து கார்டுக்கு ¾ அணாவும் கவருக்கு 1¼ அணாவும் வசூலிப்பதைக் குறைக்க ஷூஸ்டர் எந்த முயற்சியும் செய்ததாகத் தெரிய வில்லை. ஏழை இந்தியனின் மீதுள்ள உப்பு வரியைப் போக்கவும் அவர் முயலவில்லை. உப்பு மின்றி சப்பு மின்றி உள்ள இந்தத் திட்டத்தினால் இந்திய ஏழைக்கு என்ன லாபம்?

ஹேயிக் பிதற்றல்

"கல்யாணமும் பண்ணலாகாது; கடுக்கழுத்தியாகவும் ஆக வேண்டும்" என்றானாம் ஒருவன். அதே மாதிரி பிதற்றுகிறார் டெல்லியில் ஹெயிக் துரை என்ற அதிகாரியும். "காங்கிரஸ்காரர்கள் ஓரிடத்தில் சேரவும் கூடாது; ஆனால் காங்கிரஸின் அபிப்பிராயமும் தெரிய வேண்டும்" என்கிறார் அவர். "கல்கத்தா காங்கிரஸை ஏனப்பா தடுத்தாய்?" என்று அஸ்ஸெம்பிளி அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளுக்கு முன்னுக்குப் பின் முரணாக இந்த அதிகாரி பிதற்றி யிருப்பது விந்தையே. ஓரே ஒரு உதாரணம்:

"பின் பற்றுகிறவர்களின் ஆலோசனை யின்றி காங்கிரஸ் தலைவர்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டார்களென்பது எனது எண்ணம்" என்று உளறிய ஹெயிக் அதே மூச்சில் "காங்கிரஸ் தனது கொள்கையை மாற்றிக் கொண்டே தீர வேண்டும். காங்கிரஸையும் கூட்டவிட மாட்டோம்" என்று கூறினர்.

காங்கிரஸைத் தடுத்ததற்கு இரகஸ்ய நோக்கம் ஒன்று தான். அதாவது பிரிட்டிஷாரின் 'வெள்ளைக் கடுதாசி'க்கு காங்கிரஸ் கொடுக்கப் போகும் சவுக்கடிக்கு சர்க்கார் நடுங்குகின்றனர்! அதைப் பகிரங்கமாகச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு ஏதேதோ ஹெயிக் உளறுகிறாரே யன்றி வேறில்லை.

தவிட்டுபோன்ன குரல்

மாயவரத்திலிருந்து தஞ்சை பழைய டெல்டா மிராசுதார்கள் கீழ்க் கண்ட அறிக்கையை சென்னை சட்ட சபை அங்கத்தினர்களுக்கு விநியோகம் செய்திருக்கிறார்கள் :—

100க்கு 25 வீதம் வரி வஜா செய்ய வேண்டுமென்று பலர் வேண்டியதையும், 100க்கு 12½ வீதமாவது கட்டாயம் குறைத்தே ஆக வேண்டுமென்று சட்ட சபையில் தீர்மானித்ததையும் சர்க்கார் லக்ஷ்யம் செய்ய மறுத்து விட்டார்கள்.

எவ்வளவோ நெருக்கடியான சமயத்தில் பர்மாவில் 100க்கு 5 முதல் 50 வரையில் வரி தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். அடுத்தாற் போல் 20 மைல்களுக் கப்பாலுள்ள காரைக்காலில் பிரெஞ்சு சர்க்கார் 100க்கு 20 வீதம் வஜா செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க சென்னை சர்க்காருக்கு 134 லக்ஷம் ரூபாய் அதிக வருமான மிருந்தும் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைவை உயர்த்தி யிருக்கிறார்களே தவிர, ஏழை மிராசுதார்களை கவனிக்க வேயில்லை. மாதம் 50 ரூ. சம்பளக்காரனுக்கு யாதொரு வரியு மன்னியில் வருடத்துக்கு 600 ரூ. கிடைக்கிறது. நடுத் தரமான ஒரு வேலி நிலமுள்ளவனுக்கு கிஸ்தி போக 30 ரூ. கிடைப்பது அரிதாக இருக்கிறது. உத்தியோகஸ்தர்களுக்கு வாக்களித்ததை நிறைவேற்றிய சர்க்கார், மிராசுதார்களிடத்தில் மட்டும் கலம் 1-14-6 விற்ற போது ஏற்படுத்திய வரி விகிதத்தை இப்பொழுது கொடு என்று கேட்பது எந்த விதத்தில் சரியானது ?

சாதாரண நெல்லின் விலை கலம் ஒன்றுக்கு 14 அணாவாகவும், வெள்ளைச் சம்பா 1 ரூபாயாகவும் இப்பொழுது விற்று வருகிறது. விலைகள் வீழ்ந்து போயிருக்கும் காலத்தில் வரி வஜா செய்வது சட்டத்திற்கு விரோதமானது என்று சர்க்கார் சொல்கிறார்கள். பணத்திற்குப் பஞ்சாய்ப் பறக்கும் இக்காலத்தில் சர்க்கார் ஊழியர்களின் சம்பளத்தை மட்டும் எப்படி உயர்த்தினார்கள் ? வரியைக் குறைக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. இவ்வருஷம் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று தான் சொல்கிறோம்.

ரூபாய்க்கு 2 அணா குறைத்தால் என்ன லாப மென்று கேட்கிறார்கள். 10 ரூ. கிஸ்தி செலுத்தக் கூடிய 1½ ஏக்கர் நிலமுள்ளவனுக்கு 2-8-0 ரூபாயோ அல்லது 1-4-0 ரூபாயோ வஜா செய்தால் இலாப மல்லவா ?

அரிசித் தத்தளிப்பு

கால் இடறுமிடமெல்லாம் நெல் பயிர்கள் முளைத்து, நெல்லைக் குவித்துத் தள்ளும் இந்தியா தேசத்தில் மலிவான அன்னிய நாட்டு அரிசியும், நெல்லும் அதிகமாக வந்திறங்குவதற்கு நாம் இடம் கொடுத்து வருவது மிகவும் தாக்கிக்கத் தக்கது. கணக்கு பின்வருமாறு :—

1932ஞ		நெல் டன் கணக்கில்	அரிசி டன் கணக்கில்
„	ஏப்ரல்மீ	1	505
„	மேமீ	1	8,780
„	ஜூன்மீ	1	4,340
„	ஜூலைமீ	1	1,243
„	ஆகஸ்டுமீ	1	1,192
„	செப்டம்பர்மீ	1	1,320
„	அக்டோபர்மீ	2	1,252
„	நவம்பர்மீ	2	3,612
„	டிஸம்பர்மீ	—	4,395
1933	ஜனவரிமீ	—	4,572

இறக்குமதி நாளுக்கு நாள் அதிகமாகி வருவதைப் பாருங்கள் ! இப்படி பிற நாட்டு அரிசி இறக்குமதியாகிக் கொண்டே யிருந்தால் உள்நாட்டு அரிசி என்னமாக விலைபோகும் ?

சட்டத்தின் வண்டவாளம்

அதிகார வர்க்கம் தான் இயற்றிய சட்டங்களை எத்தனையோ தடவைகளில் துஷ்பிரயோகம் செய்வதுண்டு. பிழைப்புக்கு வழியின்றி அனாவசியமாக அலைகின்றவர்களைத் தண்டிப்பதற்காக 'வேக்ரன்ஸி சட்டம்' (Vagrancy Act) என்று ஓர் சட்டம் உண்டு. ராஜீயக் கிளர்ச்சிக்காரர்களைத் தண்டிக்க வேறு ஒரு வழியும் அகப்படாது போனால் இந்த 'பிச்சைக்காரர்' சட்டத்தை அவர்களுக்கு உபயோகப் படுத்த அதிகாரிகள் தயங்குவதில்லை. 'நியூசன்ஸ்' ஆக்டை உபயோகித்து ராஜீய வாதிகளை தண்டிக்கின்றவர்களும் உண்டு. அதே மாதிரி பீஹார்-ஒரிஸ்ஸா கவர்ன்மெண்டு 'கிரிமினல் டிரைப்ஸ் ஆக்ட்' என்ற சட்டத்தின் உதவியைக் கொண்டு 45 பேரை தண்டித்திருப்பதாகச் செய்தி கிடைத்துளது. அந்த 45 பேரில் அநேக வர்த்தகர்களும், ஜமீன்தார்களும் இருக்கின்றனராம் ! சட்டத்தைத் தங்கள் இஷ்டம் போல வளைத்துக் கொள்வது எதேச்சாதிகார மன்றோ !

திப்டவின் ஈட்டி முனை !

ஸாப்ரு மத்தளம்

அலகாபாத்தில் மோதிலால் தினக் கொண்டாட்டத் தன்று ஸாப்ருவுக்குக் கூட 144 போடப் பட்டதன்றோ? அந்தச் செயலுக்கு ஐக்கிய மாகாண ஹோம் மெம்பர் ரொம்ப சாமர்த்திய மாக ஸாப்ருவுக்கு 'மன்னிப்பு' தெரிவித்திருக்கிறார். "தங்களையும், ஸ்ரீமான் சிந்தாமணியையும் போன்ற பெரியார்கள் மீது தடையுத்தரவு போடப் படலாமா?" என்று பாட்டுப் பாடியிருக்கிறார். உரலுக்கு ஒரு புறம் இடி; மத்தளத்துக்கு இரண்டு புறத்திலும் இடி. இப்போது ஸாப்ருவின் நிலை மத்தளத்தின் நிலையாக இருக்கின்றது. அடக்கு முறை 144-ஐ வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டு அதே சர்க்காரிடம் பல்லைக் காட்டும் அவரது மிதவாதத் தன்மையை தேசம் இகழ்கின்றது. 144-ஐப் போடவும் போட்டு விட்டு, மன்னிப்புக் கேட்கும் பாவனையில் ஸாப்ருவின் மிதவாதத்திற்கு சர்க்கார் ஓர் குடும் கொடுத்திருக்கின்றனர். இந்த மத்தளம் இன்னும் ராஜ்ய உலகில் கிடந்து அடி படுவானேன்? சுயமரியாதை யிருந்தால்—

காங்கிரஸ் ஹவுஸ் ஏலம்!

அநேக இடங்களில் காங்கிரஸ் கட்டிடங்களை சர்க்கார் தங்கள் வசம் இப்போது வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஐக்கிய மாகாணத்தில் 'தேரியா' என்ற விடத்தில் வெகு வருஷங்களாக இருந்த காங்கிரஸ் கட்டிடத்தை சர்க்கார் பிடித்துக் கொண்டது மன்றி அதை ஏலம் போட்டுக் கேவலம் 390 ரூபாய்க்கு ஓர் முஸ்லீம் ஆளுக்கு கொடுத்து விட்டதாக ஓர் செய்தி கிடைத்துளது. இது அக்ரமமான காரியம். இந்த ஏலத்தை சர்க்கார் உடனே பரிசிலனை செய்ய வேண்டும். ஏனெனில் காங்கிரஸ் என்பது ஒரு பொது ஸ்தாபன மென்பதையும், காங்கிரஸ் கட்டிடங்கள் தேச மக்களின் பொது சொத்து என்பதையும் சர்க்கார் மறந்து விடுவதற் கில்லை. பொது சொத்துக்களை யெல்லாம் சர்க்கார், தங்களிஷ்டப்படி செய்து வருவ தென்பது அவர்கள் சட்ட ரீதியாகவே சரியாகாது. பொதுக் கட்டடங்களைக் காப்பாற்றி எப்போதாவது காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் சமரஸம் ஏற்பட்டால் அப்போது பொது மக்களிடம் ஒப்படைப்பது தான் சர்க்காருடைய கடமை யென்பதை நினைப்பூட்டுகின்றோம்.

"கதை கதையாம் காரணமாம்"

சர்வ தேச சங்கத்தினின்று ஜப்பானியப் பிரதிநிதி விலகிய போது கிறிஸ்தவ வேதத்தினின்று சொன்ன கதையை அன்று 'சங்கி'ல் வெளியிட்டோம். "பாபம் செய்யாதவர்கள், இந்த துன்மார்க்க ஸ்திரி மீது கல்லைப் போடுங்கள்" என்று கிறிஸ்து நாதர் சொன்னது வாஸ்தவம் தான். ஆனால் கடைசியாக கிறிஸ்து நாதர், "பெண்ணே போ! இனி பாபம் செய்யாதே" என்று சொன்ன வசனங்களை ஜப்பானியப் பிரதிநிதி உணர்ந்திருக்க வேண்டும். ஜப்பான் அந்தக் கட்டளைப்படி செய்ய வேண்டுமானால் ஜிஹோலில் புகுந்து சீனர்களைத் தாக்குவதை நிறுத்தி விட வேண்டு மன்றோ!

ஐரோப்பாவிலுள்ள 'கிறிஸ்தவ' ராஜ்யங்கள் பாபம் செய்தவை யென்று ஜப்பானியப் பிரதிநிதி குறிப்பிட்டார். இது அகப்பட்டுக் கொண்ட திருடன், முடிச்சவிழ்த்த இன்னொரு திருடனைக் குறை கூறுவது போலவே இருக்கின்றதன்றோ! ஒரு காலத்தில் இத்தாலிய அரசு, திரிபோலி என்ற தேசத்தில் புகுந்து அட்டகாசம் செய்தது. அப்போது W. T. ஸ்டெட் என்ற ஆங்கில அறிஞர் கிறிஸ்தவ வேதத்தினின்று சில வரிகளைச் சொல்லி இத்தாலிய அரசைக் கண்டித்தார். இத்தாலியா அந்த வேத வாக்கைப் பொருட் படுத்திற்றா? தன் காரியத்தை அது நிறை வேற்றிய வண்ணமே யிருந்தது. அதே மாதிரி மொராக்கோ போன்ற நாடுகளில் பிரான்ஸு, ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய ராஜ்யங்கள் செய்த அட்டகாசங்களும், வருஷித்த குண்டு மழைகளும் கொஞ்சம் நஞ்சமன்று. இதை யெல்லாம் ஞாபகத்திலிறுத்தவே ஜப்பானியப் பிரதிநிதி இந்தக் கதையைச் சொன்னர் போலும்.

"விவிலிய வேதத்தின் பத்துக் கட்டளைகளை மீறியே நாம் இந்தியாவை வென்றோம். ஆகவே கிறிஸ்து நாதரின் 'மலைமேல் உபதேசத்தை'த் துணையாகக் கொண்டு இந்திய நாட்டை ஆங்கிலேயர் ஆள்வதென்பது ஆகாத காரியம்" என்று பச்சையாக ஓர் தடவை 'லண்டன் டைம்ஸ்' எழுதியதை 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நினைப்பூட்டி யிருக்கிறது. நிற்க,

சீனுவில் நுழைந்து அநியாயம் செய்யும் ஜப்பான், ஜெனிவாவில் வேதக் கதையைச் சொல்வது, துரியோதனன் சாஸ்திரம் கூறியது போலிருக்கின்ற தன்றோ!

வயிறு காயுது! ஷோக் வேணுமோ?

(ஆச்சாரியா பி. ஸி. ரே)

இன்றைய இந்தியாவின் நிலைமை என்ன? கிராமங்கள் அழிகின்றன; நகரங்கள் பெருகுகின்றன. நம் நாட்டுக் கைத்தொழில்கள் நாசமாகின்றன; மேனாட்டு இயந்திரங்கள் இங்கு வந்து குவிகின்றன. மோட்டார் பஸ்ஸுகளும், லாரிகளும் ஏற்பட்டு நமது மாட்டு வண்டிகளையும், ஜட்காக்களையும் குந்த வைத்து விட்டன. அவ் வண்டிகளை வைத்திருப்பவர்கள் வயிற்றுக்குக் கஞ்சி யில்லாது தவிக்கின்றனர்.

நாம் ராஜீய உரிமையை யிழந்து, திக்கற்றுக் கிடப்பதால் தான் மேனாட்டில் செய்யப்படும் இந்த இயந்திரங்கள் இந்தியாவில் வந்து குவிய இட மேற்பட்டுளது. இவ் வியந்திரங்களை நம் தேசத்தில், நாமே செய்வதாக விருந்தால் எத்தனை லக்ஷக் கணக்கான உயிர்களுக்குக் கஞ்சி வார்க்கலாம் என்பதை யோசித்துப் பாருங்கள். இப்பொழுதோ இவ்வியந்திரங்கள் காரணமாக நாட்டில் வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பது மட்டு மன்றி, அவற்றிற்காகக் கொடுக்கப்படும் அத்தனை பணமும் இந்தியாவின் கரையை விட்டுச் செல்கின்றது.

நம் கண் முன்னே கோரமான விபத்துக்களெல்லாம் நடந்து வருகின்றன. இதுகாறும் நமது சமையலறையை அலங்கரித்து வந்த பித்தளை, வெண்கலப் பாத்திரங்களெல்லாம் மறைந்து, எனமல் சாமான்களும், அலுமினியப் பாத்திரங்களும் ஆட்சி புரிகின்றன. குழந்தைகளின் விளையாட்டுச் சாமானாகிய மரப்பாச்சிகள் போய், இப்பொழுது இந்தியக் குழந்தைகள் முன்னர் ஜப்பானிய ஸெல்லூலாயிட் பொம்மைகள் கூத்தாடுகின்றன. உள் நாட்டுப் பண்டத்திற்கு மதிப் பென்பதே யில்லை. எங்கு நோக்கினும் அன்னியச் சரக்குகள்! எல்லாம் அன்னிய மயம்! நூல் நூற்பவர்கள், நெசவாளிகள், குயவர்கள், கன்னான், கருமான் முதலிய தொழில் செய்பவர்களெல்லாம் தங்கள் திறமையை ஆதரிப்பவர்களன்றி நம் நாட்டில் வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமை நமக்குப் பெருமையைத் தரக் கூடியதா?

"வயிறு நிறையச் சாப்பிடுவதின் இன்பம் இந்திய மக்களில் 5-ல் 1 பங்கினருக்குத் தெரியவே தெரியாது" என்று ஸர் வில்லியம் ஹண்டர் 1880-ம் ஆண்டிலேயே எழுதினர். அப்பொழுதே நிலைமை அவ்வளவு மோசமாயிருந்ததெனின், இப்பொழுது கேட்க வேண்டுமா?

இன்னொரு விஷயம். சோற்றுக்கே தாளம் போடும்படியாக யிருக்கும் இந்தக் காலத்தில் பலர் ஷோக்குச் சாமான்களை வாங்கிக் காசைக் கரியாக்கி வருவது என்ன அநியாயம்? கர்லான் பிரபு இந்தியாவை ஆண்ட காலத்தில் அவர் இந்திய மன்னர்களின் ...ம்பாச்சாரித்தனத்தைக் கண்டித்ததுண்டு. உள் நாட்டுக் கைத்தொழில்களைச் சாகும்படி விட்டு, சமஸ்தான மன்னர்கள் சீமையிலிருந்து சம்பளங்கள் வரவழைத்துக் கொண்டிருந்தார்களாம். இதை விட வெட்கம் வேண்டுமோ?

"ஜப்பான் என்னென்ன அழகான சாமான்களை உற்பத்தி செய்கின்றதோ, அவற்றை இந்தியாவும் தயாரிக்கின்றது. ஆனால் தங்கள் சாமான்கள் எவ்வளவு 'பீடா'யிருந்தாலும் அவற்றையே ஜப்பானியர் ஆதரிக்கின்றனர். அவற்றைப் பற்றிப் பெருமையாகப் பேசுகின்றனர்; எழுதுகின்றனர். ஆனால் இந்தியாவிலோ நம் தொழில்களுக்குப் பெருமை யில்லை. மலிவான அந்நியச் சரக்குகளின் மீதே மோகம் பாய்கின்றது" என்று அன்றொரு நாள் டாக்டர் ஸைபுத்ராஸ் முகம்மது என்பார் கத்தினர்.

இங்கிலாந்தினிட மிருந்து நாம் கற்க வேண்டிய பாடம் ஒன்றுண்டு. பிரபுக்கள் முதல் ஏழை வரையில் அங்கு யாவரும் "பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குவ"தென விரதம் பூண்டிருக்கின்றார்கள். இதே மாதிரி "இந்தியச் சாமான்களையே வாங்கு"வதென்ற விரதத்தில் நாமும் தீவிரமாக இறங்க வேண்டும்.

—டில்லி பொருட் காட்சிப் பிரசங்கம்.

நாய் காட்சிச் சாலை!

அலஹாபாத்தில் ஒரு நாய்ச் சந்தை நடத்தினார்கள். அதில் அழகான நாய்களுக்குப் பரிசு தந்தார்களாம். அழகான நாய்களுக்குப் பரிசு தந்தார்களேயன்றி கெட்டிக்கார நாய்களைப் பற்றிக் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. மனித சமூகத்தில் ஒருவனுக்கு உத்தியோகம் கிடைக்கின்ற காலத்தில் கூட அவனது அழகையும் சிபார்சையும் கவனிக்கின்றார்களே யன்றி அவனது ஆற்றலைப் பற்றி யார் கவனிக்கின்றார்கள்?

முனிஸிபாலிட்டி ஹம்பக்

'வோட்' என்பது வெள்ளைக்காயு மல்ல, சுத்தரிக்காயு மல்ல. ஒரு பவுனுக்கும், ஐந்து ரூபாய்க்கும் விற்று விடக் கூடிய சரக்கல்ல. ஆனால் சில தாலுகா போர்டு எலெக்ஷன்களிலும், முனிஸிபாலிட்டி தேர்தல்களிலும் 'வோட்' விலைக்கு விற்கப்படுவதாகவும், வாங்கப்படுவதாகவும் நாம் கேள்விப் படுகின்றோம். 'வோட்' என்பது பிரஜா உரிமை யென்பதை மறந்தே இத்தகைய வியாபாரங்கள் நடை பெறுகின்றன போலும்! இதனால் 'வோட்' கொடுப்பவன் தனது மனச் சாக்ஷியை ஒரு கைக் கூழுக்கு விற்று விடுவது ஓர் புறமிருக்க, தேர்தலுக்கு நிற்கின்றவனும் தனது அக்கிரமத்தைக் காட்டிக் கொண்டவனாகின்றான். 'தேர்தல்' என்ற தத்துவத்தையே தோற்கடித்தவனாகின்றான். அது மட்டுமன்று; மூளை கிடையாது, சாமர்த்தியம் கிடையாது, தேச பக்தியும் பூஜ்யம், இப்பேர்ப்பட்ட பேர்வழிகள் தான் முனிஸிபாலிட்டியில் நுழைவதற்குக் காசைச் செலவழிப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட சாம்பிராணிகளை அனுப்புவதால் ஏதாவது பிரயோசன முண்டா வென்பதை ஒவ்வொரு மனிதனும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். 'வாக்கை விற்பனை செய்பவனையும் வாங்குபவனையும் இந்த தேசத்தை விட்டு நீக்கி தீவாந்திரத்துக்கு அனுப்புவதே சிறந்த வழி' என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டது கவனிக்கத் தக்கது.

சென்னை மகாண ஸ்தல ஸ்தாபன இலாகா காரியதரிசி மிஸ்டர் 'கொன்ரான் ஸ்மித்' அன்று சென்னையில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது ஸ்தல ஸ்தாபனங்களில் நடந்துவரும் அக்ரமங்கள் பலவற்றை நாஸுக்கான வார்த்தைகளால் அவர் எடுத்துக் கூறினார்.

"கக்ஷிப் பிரதி கக்ஷிச் சண்டைகளின், பயனாக வரி கொடுப்பவனின் நலத்தை மறந்து போகின்றவர்கள் பலராவர்!........ஸ்தல ஸ்தாபனங்களில் சுயநலம் காரணமாக நடக்கும் அக்ரமங்கள் பலவற்றை பகிரங்கமாக எடுத்துச் சொல்ல மனம் கூசுகின்றது" என்றார். நிற்க, ஸ்தல ஸ்தாபன சட்டத்தை சென்னை சட்ட சபை திருத்தி யமைக்கப்போகின்றது. தேர்தல் லஞ்சங்களையும், கண்டிராக்டர் லஞ்சங்களையும், அங்கத்தினர்களை நியமிக்கும் தீமைகளையும் போக்கினாலன்றி புதிய திருத்தத்தை ஓர் திருத்தமென்று நம்மால் ஒத்துக் கொள்ள முடியாது.

இரு வகை தரித்திரம்

தரித்திரம் இரண்டு விதமானதென்று அறிஞர் கூறுகின்றனர். வருமானத்திற்கு வழியேயின்றி மக்கள் தவிப்பது ஓர் வகை தரித்திரம். ஏதோ கொஞ்சம் வருமானம் வந்தாலும் அதை அநியாயமான துறைகளில் செலவிட்டுக் கொண்டு எப்போதும் தரித்திரத்தில் கிடப்பது இன்னொரு விதமான தரித்திரம்.

இந்த இருவகை வறுமைகளும் நம் நாட்டில் இப்போது நல்ல விரித்து ஆடுகின்றன. 36 கோடி மக்களில் 20 கோடி மக்களுக்கு ஒழுங்கான வேலையே யில்லை யென்றும், அவர்களுக்கு வருமானம் ஏது மில்லை யென்பதும் விவரிக்கத் தேவை யில்லை. இரண்டாவது வகையைச் சேர்ந்த தரித்திரம் இருக்கிறதே அதுதான் பொல்லாதது. அந்தத் தரித்திரத்தை நாட்டில் பரவச் செய்யும் பைசாசங்களுள் கள்ளுக் குடியும் ஒன்று.

மனிதனின் பொருளையும் ஆரோக்கியத்தையும் கொள்ளை கொள்ளும் இந்தக் குட்டிச்சாத்தானுக்கு ஆதரவோ வெகு பலமா யிருக்கிறது. துரைத்தனத்தின் பொக்கிஷ அறையை நிரப்புபவர்களில் 'குடி' என்ற குட்டிச்சாத்தான் தான் பிரதானமானவன்.

நமது சென்னை மாகாண அரசாங்கத்திற்கு சென்ற வருட வருமானத்தை விட 62 லக்ஷ ரூபாய் கள் வரி அதிகம் கிடைத்திருக்கிறது. அடுத்த வருஷத்தில் 425 லக்ஷ ரூபாய்க்குமேல் 'கள் வரி' கிடைக்க வேண்டுமென அதிகாரிகள் புள்ளி போட்டிருக்கிறார்களாம். என்ன அநியாயம்!

பக்கத்தில் கள்ளுக்கடையை நியமித்துவிட்டு குடியானவனிடம் ஏதோ கூலியைக் கொடுத்தால் அத்தனை காசையும் அந்தக் கள்ளுக்கடை மூலமாக வசூலித்து விடலாம். தரித்திரம் தலைக்கு மிஞ்சி விடவே, தன்னை மறப்பதற்காக குடியானவன் குடிக்கத் தொடங்குகின்றான். சாமான்களைத் திருடிக் கொண்டு போய் அடகு வைத்துக் குடிப்பவர்களும் உண்டு. ஆகவே கள்ளுக் கடைகளை கண்ணுக்கு முன்னே இருந்து எடுப்பதை விட குடிகாரனைச் சீர் திருத்த சிறந்த வழி வேறில்லை.

ஆனால் சர்க்காரோ அதைக் கவனிக்க மாட்டோமென்கிறார்கள். திருச்செங்கோடு தாலுகாவில் மூடியிருந்த கள்ளுக் கடைகளை யெல்லாம் இந்த வருடம் திறந்து விட்டிருக்கிறார்களே இதற்கென்ன அர்த்தம்?

பல்லிளிச்சான்கள்!

சட்ட சபைகளில் கொல்லை வழியாகப் புகுகின்ற கூட்டம் ஒன்றுண்டு. தேசத்தில் தேர்தலில் நின்று இடத்தைப் பெறாமல் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களையே நாம் குறிக்கின்றோம். யாதொரு காசு செலவின்றி இவ்வளவு பெரிய ஸ்தானத்தை இனாமாகக் கொடுத்த சர்க்காருக்கு இக் கூட்டம் நன்றி பாராட்டாது இருக்கலாமா? ஆகவே சட்ட சபைகளில் சர்க்காருக்கு எப்போதும் பல்லைக் காட்டிக்கொண்டு, சர்க்காருக்கு சாதகமாகவே சதா 'வோட்' கொடுத்துக் கொண்டு இந்தக் கூட்டம் குந்திக் கிடக்கின்றது.

சுட்டுப் போட்டாலும் ராஜீய மென்பதை இன்ன தென்று அறியாத வேகாத பாண்டங்களும் சில உண்டு. கிராமபோன் போலும், கிளிப் பிள்ளைகள் போலும் சர்க்கார் சொல்லிக் கொடுத்ததை அப்படியே சட்ட சபைகளில் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதே இவர்கள் பிரசங்க வன்மை. சிலர் எழுதிக் கொண்டு வந்தும் சட்ட சபைகளில் படிப்பது முண்டு. யார் எழுதிக் கொடுத்தார்களோ அது பெரிய இரகஸ்யமான சமாச்சாரம். சர்க்கார் தரப்பில் கை தூக்கும் கை காட்டி மரங்க ளென்றும் இவர்களை வருணிக்கலாம். பொது ஜன அபிப்பிராயத்தை மிதிப்பதற்கு அவ்வப்போது இந்த நியமன அங்கத்தினர்களின் வோட்டுகளை சர்க்கார் உபயோகித்துக் கொள்வதுண்டு. நியமிக்கப் பட்டவர்களில் ஏதோ ஒருவர் இருவர் சர்க்காருக்கு விரோதமாக ஒரோர் தடவைகளில் நின்று விட்டார்களானல் அந்த அங்கத்தினர்கள் மீது சர்க்கார் தரப்பினருக்கு வரும் கோபமிருக்கிறதே, அதை வருணிக்க முடியாது. அந்தக் கோபத்திற்கு பயந்து கொண்டே பெரும்பான்மைக் கூட்டம் சதா சர்க்காருக்கு 'ததிங்கிணதோம்' போடுகிறதாகச் சொல்லலாம்.

இந்தப் பல்லிளிச்சான் கூட்டத்திற்கு ஜன நாயக அரசியலில் இடந் தரலாகாது. இனிமேல் வரப்போகும் சீர்திருத்தம் எத்தகையதாயிருப்பினும் அதில் அங்கத்தினர்களை 'நியமனம்' செய்யப் போவதில்லை யென்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆகவே வருங் காலத்தில் பகிரங்க ஸதிருக்கு இந்தக் கூட்டம் வந்தே தீரும். அதை யோசித்தாவது இந்தக் கூட்டம் இப்போது சட்ட சபைகளில் சுதந்திரத்தோடு நடந்து கொள்ளலாகாதா?

'செக்குக்குத் தலை கோடு!'

பயந்து விடாதீர்கள்! 'செக்கு' என்ற ஆங்கிலப் பதத்துக்கு 'தரிசன உண்டியல்' என்பது தமிழ் அர்த்தம். 'தலை' என்ற தமிழ் வழக்கு மொழிக்கு 'ஸ்டாம்பு' என்பது ஆங்கிலப் பெயர். அதாவது இனிமேல் தரிசன உண்டியல் எழுதிக் கொடுக்கும்போது ஸ்டாம்பு ஒட்டியே கொடுக்கப்பட வேண்டுமென ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர் என்ற பொக்கிஷ மந்திரி டெல்லியில் ஓர் சிபார்சு செய்திருக்கிறார். பணம் வேகமாக புரளாத இக்காலத்தில் உண்டியல்கள் மூலம் வியாபாரங்கள் நடத்துவது கொஞ்சம் சவுகரியமா யிருக்கும். அந்த உண்டியல்களுக்கு ஸ்டாம்புக் கட்டணம் தரவேண்டுமென திடீரென சர்க்கார் கேட்க ஆரம்பிப்பது நியாயமென்று நமக்குத் தோன்றவில்லை. இந்த விஷயம் வாசகர்களுக்குப் புரியவில்லையாயின் அடுத்தாற் போலுள்ள ஓர் பெரிய வியாபாரியிடம் விபரத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

வாட்சன் குறும்பு

இந்தியாவில் அச்சுச் சட்ட பூதம் தோன்றியதால் அநேக தேசியப் பத்திரிகைகள் செத்தன; அநேக ஜாமீன் தொகைகள் பறி முதலாயின. அந்த அச்சுச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டு மென்று சர்க்காருக்கு ஆரம்பத்திலிருந்தே ஜாடையாகவும் பகிரங்கமாகவும் சிபார்சு செய்த மகான்களில் ஸர் ஆல்பிரட் வாட்சன் என்ற மகானும் ஒருவர்.

'ஸ்டேட்ஸ்மன்' என்ற கல்கத்தா வெள்ளைக்காரப் பத்திரிகையின் ஆசிரியரான இந்த வாட்ஸன், சீமையிலும் போய் தமது குறும்புப் பிரசாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். "அபிப்பிராயங்களைக் கூறுவதில் இந்தியப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப் பட்டுள்ள சுதந்திரமோ அதிகம். ஆனல் அவர்கள் அந்தச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கின்றனர்" என்று ஓர் கட்டுரையில் எழுதியிருக்கிறார். இப்படி அபத்தங்களைக் கூறி சீமை வாசிகளை ஏய்க்கின்ற இந்த வாட்சனை குறும்புப் பிரசாரகனென ஏன் அழைக்கலாகாது? இந்தியப் பத்திரிகைகளத்தனையும் செத்து, இவரது 'ஸ்டேட்ஸ்மன்' மட்டும் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டு மென்பது இந்தப் புண்ணியவானின் நோக்கமோ?

நமது இளிஞ்சல் குவியல்

தாழ்த்தப்பட்ட வகுப்புக் குழந்தைகளுக்கு படிப்பதற்காக புத்தகங்களும், எழுதுவதற்கு சிலேட்டுகளும் இனமாக வழங்குவதெனத் தீர்மானித்து திருப்பூர் முனிசிபாலிட்டி ரூ. 100 சாங்கிஷன் செய்திருக்கிறது.

சேலத்தில் துண்டுப் பிரசுரம் வழங்கிக் கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளையைக் கைது செய்து, எச்சரிக்கை செய்து விட்டு விட்டனர். ராமாநுஜம் என்பவருக்கு "சட்ட மறுப்பு இயக்கத்துக்கு உதவி செய்தால் கைது செய்யப்படுவீர்" என்று உத்திர விடப்பட்டிருக்கிறது.

மருளிப்பட்டணத்தில் கள்ளுக் கடை மறியல் செய்த இருவருக்கு தலா 6 மாதம் தண்டனையும், 500 ரூ. அபராதமும்.

லாகூரில் நவ ஜவான் பாரத சபையின் காரியதரிசியான ஸ்ரீமான் மங்களதாஸின் வீட்டைச் சோதனை யிட்டு ஒரு சுவரொட்டி விளம்பரத்தைப் பறிமுதல் செய்தனராம்.

டெல்லியில் ஒரு முஸ்லீம் ஊழியருக்கு 24 மணி நேரத்துக்குள் வெளியே போய்விட வேண்டுமென்றும், உத்திரவன்னியில் டெல்லியில் பிரவேசிக்கக் கூடாதென்றும் உத்திரவு.

பம்பாயில் சாராயக்கடை மறியல் செய்தவர்களில் இருவருக்கு தலா 6 மாதமும், ஒருவருக்கு 4 மாதமும்.

சௌக்கிதாரி வரி கொடாததற்காக நந்தன் பூருக்கருகில் 27 கிராமங்களில் உள்ள ஜங்கமப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கான்பூரில் தபால் பஹிஷ்கார தினக் கொண்டாட்ட சம்பந்தமாக பல தபால் பெட்டிகளுக்குள் திராவகம் ஊற்றப்பட்டு கடிதங்கள் நாசமாக்கப்பட்டன. ஒரு பெட்டி எரிக்கப்பட்டிருந்தது. பம்பாய் கவாஸ்ஜி ஜிஹாங்கிர் ஹாலில் நடத்தப்பட்ட கள்ளுக் கடை ஏலத்தை மறியல் செய்கையில் இரண்டு தொண்டர்கள் கைதியாயினர்.

காந்திஜி செய்த வேலைகளைக் காட்டும் 12 சினிமாப் படங்களை நிஜாம் ராஜ்யத்தில் காட்டக் கூடாதென போலீஸார் தடுத்து விட்டனர்.

பம்பாயில் வண்ணார வகுப்பைச் சேராதவர்கள் "லாண்ட்ரி" வைத்து நடத்துவதை ஆமிரக் கணக்கான வண்ணார்கள் ஒன்று கூடி கண்டித்தனர். புதனன்று வேலை நிறுத்தமும் செய்தனர்.

பம்பாய் சட்ட சபையில் புகையிலை விற்பதற்குக் கட்டணம் விதிக்கக் கொண்டு வரப்பட்ட மசோதாவை 2 வருஷங்களுக்கு மட்டுமே அமுலில் வைத்திருக்கப் போவதாக பொக்கிஷ மெம்பர் கூறினாராம்.

ஜப்பல்பூரில் ராம் குன்வார் என்பவரது விதேசித் துணிக் கடையை சிறிது நேரம் தொண்டர்கள் மறியல் செய்ததும், கடைக்காரர் வழிக்கு வந்து அந்நியத் துணிகளை இனி வியாபாரம் செய்வதில்லை யென உறுதி கூறினர். அதன் பேரில் மறியல் நிறுத்தப்பட்டது.

ஆமதாபாத்தில் ஜயந்திலால் அம்ருதலால் என்ற மில், வியாபார மந்தம் காரணமாக மூடப்பட்டு விட்டதால் சுமார் 2000 தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கிறார்கள்.

புதிய சீர்திருத்தங்களைக் கண்டிக்கவும், காந்தியின் விடுதலையை வற்புறுத்தவும் நாயிறன்று அலகாபாத்தில் ஒரு கூட்டத்தை நடத்த மிதவாதத் தலைவர்களில் பலர் கையெழுத்திட்டு ஏற்பாடு செய்தனர். ஆனால் அதில் ஸர் சப்ரு வின் பெயரையே காணோம். காரணம் என்ன?

ஜெர்மனியில் பொது உடமைக் கக்ஷி வலுத்து விடுமோ என்று பயந்து அதை அடக்க கடுமையான அவசரச் சட்டங்கள் போட்டு, 130 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருக்கின்றனர். இந்தியர்கள் பலரும் கைதியாயினர். கவசந் தரித்த ராணுவப் படைகள் உலவி வருகின்றனவாம்.

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தக் கருவிகள் ஏற்றுமதி செய்வதை பிரிட்டிஷ் காமன்ஸ் சபை அங்கீகரித்து விட்டது. எல்லாப் போர்முகங்களிலும் ஜப்பானியப் படைகள் தடை செய்யப்பட்டு விட்டதாக சீனச் செய்தி கூறுகின்றது. ஜப்பானியர் விஷப் புகை உபயோகப் படுத்துகின்றனராம்.

கண்ணனூரில் ஊர்வலம் சென்ற தொண்டர்களைப் போலீசார் கைது செய்தனர்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane Madras.